ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/17 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24

*2307/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

### நவகத்தேகம பிரதேச சபை

"வடமேல் மாகாணத்தின கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/35 ஆம் இலக்கம் மற்றும் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள "வடமேல் மாகாணத்தின் பிரதேச சபையினால் நடாத்திச் செல்கின்ற பாதைகள் மற்றும் குறுகிய பாதைகளது திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் பெயர்ப் பட்டியலை காட்டும் அறிவித்தலை விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டளை" தொடரில் செய்யப்பட்ட விதிமுறைகள் மற்றும் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தில் 24(1) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட விதியின் கீழ், 2022.07.04 ஆந் திகதி மற்றும் 2287/06 ஆம் இலக்கத்திற்கான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் நவகத்தேகம பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டும் என்று கருதப்பட்ட பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் இடையே, குறித்த அறிவித்தலில் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் முறையான நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படாத பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் மற்றும் குறித்த திகதிக்கு முன் முறையான நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புப்படி பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டியது என்று கருதுவதாக உறுதி செய்யப்பட்ட எல்லா பாதைகள் மற்றும் குறுக்கு பாதைகள் நவகத்தேகம பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டும் என்றும் 2022.10.13 ஆந் திகதி நடாத்தப்பட்ட 529 ஆம் பொது கூட்ட இலக்கத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டதாக பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்துடன் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

குறித்த பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் தொடர்பான பெயர்ப்பட்டியல் இங்கு அட்டவணையில் உள்ளடக்கி உள்ளதுடன் அங்கு உள்ளடங்கிய எல்லா பாதைகளும் மற்றும் குறுகிய பாதைகளும் பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் (5) ஆம் உப பிரிவின் கீழ் நவகத்தேகம பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பாதைகள் மற்றும் குறுகிய பாதைகளாக கருதப்பட வேண்டும் என்று மேலும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**எஸ். எம். ஐ. சேனாதிபதி,**
தலைவர்,
நவகத்தேகம பிரதேச சபை.

நவகத்தேகம பிரதேச சபை பிரதான அலுவலகத்திலிருந்து,
2022, ஒற்றோபர் 26.

1A - PG 6056 — 07 (2022/11)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பிரேரணை**

"வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2238/35 ஆம் இலக்கம் மற்றும் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள "வடமேல் மாகாணத்தின் பிரதேச சபையினால் நடாத்திச் செல்கின்ற பாதைகள் மற்றும் குறுகிய பாதைகளது திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் பெயர்ப்பட்டியலைக் காட்டும் அறிவித்தலை விளம்பரப்படுத்தல் தொடர்பான கட்டளை" தொடரில் செய்யப்பட்ட விதிமுறைகள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தில் 24(1) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட விதியின் கீழ், 2022.10.13 ஆந் திகதி நடாத்தப்பட்ட நவகத்தேகம பிரதேச சபைக் கூட்டத்தில் 529 ஆம் இலக்கத்திற்கான தீர்மானப்படி, 2022.07.06 ஆந் திகதி 2287/06 ஆம் இலக்கத்திற்கான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் அட்டவணையில் உள்ளடங்கிய பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்ற பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் இடையே, முறையான நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத மற்றும் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ளடங்கிய பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் நவகத்தேகம பிரதேச சபைக்குரிய பாதைகள் மற்றும் குறுகிய பாதைகள் என்று உறுதி செய்யப்பட வேண்டும் என்று நவகத்தேகம பிரதேச சபை பிரேரணை செய்கின்றது.

EOG *11 - 0240*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.